## TAMIL NADU POLLUTION CONTROL BOARD

**Minutes of the Public Hearing Meeting of M/s. T.Prabhakaran Rough Stone and Gravel Quarry located at S.F.Nos. 1083(P), 1086/1(P), 1089/1(P), 1084/1 (P), 1084/2 (P), 1086/1 (P), 1089/1 (P), and 1089/2 Punnam Village, PugalurTaluk, Karur District over an Extent of 5.43.40 hectares held on 29.01.2026 at 11.00 A.M in Sri Bharani Mahal, Near Palamalai,Pavithiram Village, PugalurTaluk, Karur District.**

**Participants:**

1. Thiru. G. Vimalraj,
   District Revenue Officer,
   Karur.
2. Dr. S. Sathiyan
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Karur.
3. General Public - (as per annexure)

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Karur:**

The District Environmental Engineer, in his welcome address, extended greetings on behalf of the District Administration and the Tamil Nadu Pollution Control Board to the District Revenue Officer, Karur, who is presiding over this public hearing meeting for the M/s T. Prabhakaran Rough stone and gravel quarry in extent of 5.43.40 hectares across the aforementioned survey numbers in Punnam Village, Pugalur Taluk, Karur District to all the public who have come to express

their views, to environmental volunteers, government officials, police personnel, quarry owners implementing this project.

As per the Ministry of Environment, Forest and Climate Change (MoEF & CC) guidelines under the Environmental Impact Assessment (EIA) Notification 2006, eight categories of industries require prior environmental clearance. Accordingly, for certain industries, a public hearing must be conducted before obtaining the Environmental Clearance (EC). In line with this, if a quarry or cluster of quarries exceeds 5 hectares individually or as a cluster within 500 meters, it falls under Category B1 and requires prior environmental clearance. On this basis, following the application submitted by M/s T.Prabhakaran Rough stone and gravel quarry, this public hearing is being held today. Notices regarding this were published on 18-12-2025 in The Indian Express and Dinamalar newspapers 30 days in prior. Also, copies of the Environmental Impact Assessment report related to the project were placed in the public domain one month prior at the District Industries Centre, Taluk Development Office, District Collectorate, and several other offices. Public announcements about this meeting were made last Friday through public address systems, pamphlets, and wall posters. Furthermore, the executive summary of the project in Tamil and English has been uploaded on the Tamil Nadu Pollution Control Board website for public viewing.

The project consultant will now explain the project and the Environmental Impact Assessment report to everyone via PPT. Following that, the public may submit their views orally or in writing. He humbly requested those submitting oral views to clearly and concisely state their name, village, and opinions, keeping in mind the value of time. He then invited the District Revenue Officer to preside over and conduct the public hearing meeting in accordance with the public's views.

**District Revenue Officer:**

The District Revenue Officer conveyed his greetings to all the public, stated that the project consultant would explain the project to the public via PPT, and that the public could then submit their views.

**Environmental Consultant, Geo Technical and Mining Solutions:**

The project consultant explained the project and the conducted Environmental Impact Assessment to the public via PPT. He also elaborated on the proposed air and water pollution control measures for the stone quarry. Additionally, he highlighted the benefits of the quarry project.

**Views of Participants:**

1. **Tmt. M. Ranjitha W/o. A. Mohan, Punnam:**

   Permission may be granted for this stone quarry, she said.

2. **Tmt. D. Gomathi W/o. R. Dharmalingam, Punnam:**

   Permission may be granted for this stone quarry, she said.

3. **Tmt. A. Akarpiraveena W/o. Asokabarathraj, Ayyanur:**

   I am from Punnam, Ayyanur. Permission may be granted for this stone quarry, she said.

4. **Thiru. A. Satheesh S/o. Mani, Punnam:**

   I am from Punnam village. Permission may be granted for this stone quarry, he said.

5. **Tmt. P.Eswari W/o. Periyasamy, Punnam:**

   I am from Punnam village. Permission may be granted for this stone quarry, she said.

6. **Thiru. M. Vibushan S/o. Marimuthu, Punnam:**

   Greetings to all. I am from Punnam village. I have been living in Punnam village for the past decade. This quarry causes no harm to anyone. There is no hindrance; they operate safely. They have planted 50,000 saplings around the quarry and provide good protection. Granting permission to this quarry will benefit many families, he said.

7. **Tmt. V. Kowsalya, W/o. Gnanashekaran, PunnamChathiram:**

   I am from Punnam village. There are limited job opportunities here. Many families depend on this quarry. It will benefit many families. Therefore, permission may be granted for this stone quarry, she said.

8. **Thiru. R.Venkatesan S/o. Rangasamy, Punnam:**

Greetings to all. My name is Venkatesan. Permission may be granted for this stone quarry, he said.

9. **Tmt. P. Thangammal W/o. Perumal, Punnam:**

My name is Thangammal. I am from Punnam village. Permission may be granted for this stone quarry, she said.

10. **Thiru. P. Seviyappan S/o. Perumal, Ayyanur:**

My name is Seviyappan. I am from Ayyanur village. Over 250 people work in this quarry. This is not just 250 people but 250 families. Therefore, permission may be granted for this stone quarry, he said.

11. **Thiru. V. Kumar S/o. Velliyangiri, Kolathur:**

My name is Kumar. I am from Kolathur. Permission may be granted for this stone quarry, he said.

12. **Thiru. K. Gopalakannan S/o. Krishnan, Punnam:**

I am from Punnam village. Permission may be granted for this stone quarry, he said.

13. **Tmt. S. Anandi W/o. K. GopalaKannan, Punnam:**

I am from Punnam village. Permission may be granted for this stone quarry, she said.

14. **Thiru. P. Kanakaraj S/o. Palanisamy, Velayudhampalayam:**

My name is P. Kanakaraj. I am from Velayudhampalayam village. Permission may be granted for our village's crusher, he said.

15. **Thiru. R. Sambath S/o. Balasubramaniam, Karur:**

My name is R. Sambath. I am the Karur District Secretary of the Forward Block Party. Granting permission to this Prabhakaran stone quarry will ensure a steady supply of raw materials for construction without interruption. It will also provide livelihood growth and employment to the surrounding public. Therefore, on behalf of ForwardBlock Party, I request permission for the Prabhakaran stone quarry.

7

**16.Thiru. H.Sabarinathan S/o. Harikharan, Punnam:**

My name is Sabarinathan. I am from Punnam village. Permission may be granted for this stone quarry.

**17.Thiru. R. Sakthivel S/o. Ramasamy, Punnam:**

My name is Sakthivel. I am from Punnam village. This quarry's operation causes no harm to anyone. Therefore, permission may be granted for this stone quarry, he said.

**18.Thiru. E. Sivakumar S/o. Eswaran, Punnam:**

I am from Punnam village. This quarry provides employment to over 100 families. Funds are allocated to the panchayat via minor minerals, enabling various benefits. Assistance is provided to nearby schools and primary health centres. Therefore, permission may be granted for this stone quarry.

**19.Thiru. V. Ayyappan S/o. Velmani, Thanthonrimalai:**

I am from Thanthonrimalai. This quarry generates revenue for the government. Construction materials are easily available. If the quarry doesn't operate, construction material prices will rise. Moreover, they provide many benefits to surrounding areas, plant and nurture saplings excellently. Therefore, permission may be granted for this stone quarry.

**20.Thiru.V. Rajesh S/o. T.K. Vijayan, Karur:**

Permission may be granted for this stone quarry.

**21.Thiru. R. Karuppannan S/o. Ramasamy, Punnam:**

My name is Su. Karuppannan. I am from Punnam Velayudampalayam. We have given land to several crushers ourselves. We graze goats and cows there. There is no harm. Therefore, permission may be freely granted for the crusher, he said.

**22.Thiru. S.Balakrishnan S/o. Subramani, Panchaiyampatti:**

My name is S.Balakrishnan. I am the Union Secretary, Communist Party of India, K. Paramathi. My morning greetings to the government officials, public, and quarry owners attending this public hearing. "Change is the only constant" is the principle by which the world operates. Tamil Nadu has 80 million people. A house is essential for everyone and a dream for all. Without the stone quarry industry,

national development and individual progress cannot happen anywhere. Even as the world liberalizes and various industries are affected, the country grows rapidly. In that context, stone quarries play a key role. This company has 30 years of experience. So far, it has caused no harm to the public or the environment. Therefore, permission may be granted for this stone quarry.

**23.Tmt. M. Revathi W/o. Mohan, Punnam:**

My name is Revathi. I am from Punnam village. Permission may be granted for this stone quarry.

**24.Thiru. S. Mohan S/o. Sekar, Punnam:**

My name is Mohan. Permission may be granted for this stone quarry.

**25.Thiru. M. Sakthivel S/o. ManikkaSundaram, Pasupathipalayam:**

My name is Sakthivel. I am from PunnamPasupathipalayam. I hear this quarry operates within legal frameworks. The sand available here is of superior quality not found in other districts. Therefore, permission may be granted for this stone quarry, he said.

**26.Thiru. S. SudhaKaran S/o. Sanmugam, Pasupathipalayam:**

I am from Punnam village Pasupathipalayam. Permission may be granted for this stone quarry, he said.

**27.Thiru. R. Dharmalingam S/o. Ramasamy, Punnam:**

I am from Punnam village. This quarry's operation causes no hindrance to anyone. Therefore, permission may be granted for this stone quarry, he said.

**District Environmental Engineer ,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Karur District.**

**District Revenue Officer,**
**Karur District.**

a

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

கரூர் மாவட்டம், புகழூர் வட்டம், பவித்திரம் கிராமம், பாலமலை அருகில் அமைந்துள்ள பரணி மஹாலில் 29.01.2026 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்ற கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், புன்னம் கிராமம், புல எண். புல எண்கள். 1083 (Part), 1084/1(Part), 1084/2 (Part), 1086/1 (Part), 1089/1(Part) & 1089/2 (Part) –ல் 5.43.40 ஹெக்டர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள்.T. பிரபாகரன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை விபரங்கள்:

பங்கு பெற்றோர்:

1. திரு.கு. விமல்ராஜ்,
   மாவட்ட வருவாய் அலுவலர்,
   கரூர்.

2. முனைவர். S. சத்தியன்,
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   கரூர்.

3. பொதுமக்கள்– (இணைப்பில் உள்ளபடி)

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்: தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கரூர்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் தனது வரவேற்புரையில், கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், புன்னம் கிராமம், புல எண். புல எண்கள். 1083 (Part), 1084/1(Part), 1084/2 (Part), 1086/1 (Part), 1089/1(Part) & 1089/2 (Part) –ல் 5.43.40 ஹெக்டர் பரப்பளவில் அமைய உள்ள தி/ள்.T. பிரபாகரன் நிறுவனத்தின் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்து நடத்தவிருக்கும் நமது மாவட்ட வருவாய் அலுவலர், கரூர் அவர்களையும், தங்கள் கருத்துக்களை பதிய வந்திருக்கும் பொதுமக்கள் அனைவரையும், சுற்றுச்சூழல் தன்னார்வலர்களையும், அரசு அதிகாரிகளையும் காவல்துறை அதிகாரிகளையும் இந்த திட்டத்தினை செயல்படுத்தும் குவாரி உரிமையாளர்களையும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பிலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பிலும் வரவேற்றார்.

மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் (Ministry of Environment and Climate Change) படி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன் படி எட்டு வகையான தொழிற்சாலைகளுக்கு, சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் எனவும், அதன்படி ஒரு சில தொழிற்சாலைகளுக்கு பொதுமக்கள் கருத்து கேட்டு கூட்டம் நடத்திய பிறகு Environmental clearance அதாவது சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் என்பதும் விதியாகும். அதன்படி ஒரு குவாரி அல்லது ஒரு கிளஸ்டர் ஆஃப் குவாரிகளோ 5 ஹெக்டருக்கு மேல் தனியாகவோ அல்லது கிளஸ்டர் ஆகவோ இருந்தால் 500 மீட்டருக்குள் இருந்தால் பி–1 வகைப்பாட்டின் படி சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் எனவும், அதன்படி தி/ள்.T. பிரபாகரன் அவர்கள் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி கோரி விண்ணப்பித்ததன் அடிப்படையில் இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டமானது தற்பொழுது நடைபெற இருக்கிறது எனவும், இது தொடர்பாக தி இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமலர் செய்தித்தாள்களின் 18–12–2025 அன்று இது சம்பந்தமான வெளியீடு 30 நாட்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது எனவும், இது அல்லாமல் திட்டம் தொடர்பான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் நகல்கள் ஒரு மாதத்திற்கு முன்பாகவே மாவட்ட தொழில் மையம், வட்டார வளர்ச்சி அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட பல அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறினார். இந்த கூட்டம் பற்றிய பொது அறிவிப்பு, ஒலிபெருக்கி, துண்டுப் பிரசுரம் மற்றும் சுவரொட்டி மூலமாக கடந்த வெள்ளிக்கிழமை அன்று செய்யப்பட்டது. மற்றும் இந்த திட்டம் தொடர்பாக தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அதன் சுருக்க அறிக்கையானது, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய இணையதளத்தில் பொதுமக்கள் பார்வைக்கு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தற்பொழுது இந்தத் திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்ட அறிக்கை பற்றியும், இந்த நிறுவனத்தின் உடைய திட்ட ஆலோசகர், தங்கள் அனைவருக்கும் PPT மூலமாக விளக்க இருக்கிறார் எனவும், அதனை தொடர்ந்து பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வாய் மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பதிவு செய்யலாம் எனவும், வாய்மொழியாக பதிவு செய்யும் பொதுமக்கள் தங்களது பெயர், எந்த ஊரைச் சார்ந்தவர், தங்களது கருத்துக்களை தெளிவாகவும், சுருக்கமாகவும் காலத்தின் அருமை கருதி பதிவு செய்யுமாறு தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார். இப்பொழுது மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை இந்த பொதுமக்கள் கருத்துக்கு ஏற்ப கூட்டத்தை அவர்களை கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தி தருமாறு கேட்டுக்கொண்டார்.

மாவட்ட வருவாய் அலுவலர் :

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பொதுமக்கள் அனைவருக்கும் தனது வணக்கத்தினை தெரிவித்துக்கொண்டு இத்திட்டத்தின் ஆலோசகர் இத்திட்டம் பற்றி ppt மூலமாக பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் பின்னர் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களைபதிவு செய்யலாம் என்றும் கூறினார்.

சுற்றுச்சூழல் ஆலோசகர், ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொல்யுசன்ஸ்:

திட்ட ஆலோசகர் பொதுமக்களுக்கு ppt மூலம் திட்டம் குறித்தும் அத்திட்டத்திற்காக நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்தும் விளக்கி கூறினார். மேலும் உத்தேசிகப்பட்டுள்ள கல்குவாரியில் மேற்கொள்ளபடவுள்ள காற்று மற்றும் நீர் மாசு தடுப்பு முறைகளை பற்றியும் விளக்கி கூறினார். மேற்படி கல்குவாரி திட்டத்தின் பயன்களையும் விளக்கினார்.

நிகழ்வில் பங்குகொண்டோரின் கருத்துக்கள் பின்வருமாறு

1. திருமதி.M. ரஞ்சிதா W/o. A. மோகன், புன்னம்:

அனைவருக்கும் வணக்கம். எனது பெயர் ரஞ்சிதா. இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

2. திருமதி.D. கோமதி, W/o. R. தர்மலிங்கம், புன்னம்:

அனைவருக்கும் வணக்கம். எனது பெயர் கோமதி. புன்னம் முத்துநகரில் இருந்து வருகிறேன். இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

3. திருமதி.A. அகர்பிரவீனா, W/o. R. அசோக்பாரத்ராஜ், அய்யனூர்:

அனைவருக்கும் வணக்கம். எனது பெயர் அகர்பிரவீனா. புன்னம் அய்யனூரில் இருந்து வருகிறேன். இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

4. திரு.M. சதீஸ், S/o.மணி, புன்னம்:

அனைவருக்கும் வணக்கம். எனது பெயர் சதீஸ். புன்னம் கிராமத்தில் இருந்து வருகிறேன். இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

5. திருமதி.P. ஈஸ்வரி, W/o. பெரியசாமி, புன்னம்:

அனைவருக்கும் வணக்கம். புன்னம் கிராமத்தில் இருந்து வருகிறேன். இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

6. திரு.M. விபூசணன், S/o. மாரிமுத்து, புன்னம்:

அனைவருக்கும் வணக்கம். நான் புன்னம் கிராமத்தில் இருந்து வருகிறேன். நான் கடந்த பத்தாண்டு காலமாக புன்னம் கிராமத்தில் வசித்து வருகிறேன். இந்தக் கல்குவாரியினால் யாருக்கும் பாதிப்பும் இல்லை. எந்த இடையூறும் இல்லை பாதுகாப்பாக கல்குவாரியை

நடத்துகிறார்கள். கல்குவாரியை சுற்றிலும் 50,000 மரக்கன்றுகளை வைத்திருக்கிறார்கள். நல்ல ஒரு பாதுகாப்பை கொடுக்கிறார்கள். இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கினால் எவ்வளவோ குடும்பங்கள் இதனால் பயனடையும் என்று கூறினார்.

7. திருமதி.V. கௌசல்யா, W/o. ஞானசேகரன், புன்னம்சத்திரம்:

அனைவருக்கும் வணக்கம். புன்னம் கிராமத்தில் இருந்து வருகிறேன். இங்க அதிகமான வேலைவாய்ப்பு இல்லை. இந்தக் குவாரியை நம்பியே அதிக குடும்பங்கள் உள்ளன. இந்தக் குவாரியினால் பல குடும்பங்கள் பயனடையும். எனவே, இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

8. திரு.R. வெங்கடேசன், S/o. ரங்கசாமி, புன்னம்:

அனைவருக்கும் வணக்கம். எனது பெயர் வெங்கடேசன். இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

9. திருமதி.P. தங்கம்மாள், W/o. பெருமாள், புன்னம்:

அனைவருக்கும் வணக்கம். எனது பெயர் தங்கம்மாள். புன்னம் கிராமத்தில் இருந்து வருகிறேன். இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

10. திரு.P. சேவியப்பன், W/o. பெருமாள், அய்யனூர்:

அனைவருக்கும் வணக்கம். எனது பெயர் சேவியப்பன். அய்யனூர் கிராமத்தில் இருந்து வருகிறேன். இந்தக் கல்குவாரியில் 250–க்கும் மேற்பட்டோர் வேலை செய்கின்றனர். இது 250பேர் மட்டுமல்ல இது 250 குடும்பங்கள். எனவே, இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

11. திரு.V. குமார், S/o. வெள்ளியங்கிரி, கொளத்தூர்:

எனது பெயர் குமார். கொளத்தூரில் இருந்து வருகிறேன். இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

12. திரு.K. கோப்பாலக் கண்ணன், S/o. கிருஷ்ணன், புன்னம்:

எனது பெயர் கோபாலக் கண்ணன். புன்னம் கிராமத்தில் இருந்து வருகிறேன். இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

13. திருமதி.S. ஆனந்தி, W/o. K. கோபாலக் கண்ணன், புன்னம்:

எனது பெயர் ஆனந்தி. புன்னம் கிராமத்தில் இருந்து வருகிறேன். இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

14. திரு.P. கனகராஜ், S/o.பழனிச்சாமி, வேலாயுதம்பாளையம்:

எனது பெயர் P. கனகராஜ் வேலாயுதம்பாளையம் கிராமத்தில் இருந்து வருகிறேன். எங்கள் ஊர் கிரஷருக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

15. <u>திரு.B. சம்பத், S/o.பாலசுப்பிரமணியம், கரூர்:</u>

எனது பெயர் B. சம்பத், நான் பார்வேடு பிளாக் கட்சியின் கரூர் மாவட்ட செயலாளராக உள்ளேன். இந்தக் பிரபாகரன் கல்குவாரிக்கு அனுமதி வழங்கினால் தான் கட்டுமான பொருட்களுக்கு மூலப்பொருட்கள் தங்கு தடையின்றிகிடைக்கும். அதேபோல் சுற்றியுள்ள பொதுமக்களுக்கு வாழ்வாதாரம் வளர்ச்சிஅடையும். வேலைவாய்ப்பு கிடைக்கும். எனவே, இந்த பிரபாகரன் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று பார்வேடு பிளாக் கட்சியின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன் என்று கூறினார்.

16. <u>திரு.H. சபரிநாதன், S/o.ஹரிஹரன், புன்னம்:</u>

எனது பெயர் சபரிநாதன். நான் புன்னம் கிராமத்தில் இருந்து வருகிறேன். இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

17. <u>திரு.R. சக்திவேல், S/o.ராமசாமி, புன்னம்:</u>

எனது பெயர் சக்திவேல். நான் புன்னம் கிராமத்தில் இருந்து வருகிறேன். இந்த குவாரி இயங்குவதால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. எனவே, இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

18. <u>திரு.E. சிவக்குமார், S/o.ஈஸ்வரன், புன்னம்:</u>

எனது பெயர் சிவக்குமார். நான் புன்னம் கிராமத்தில் இருந்து வருகிறேன். இந்தக் கல்குவாரியினால் 100–க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. சிறு கனிம விதிப்படி பஞ்சாயத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டு அதன் வாயிலாக பல நன்மைகள் செய்யப்படுகின்றது. அருகில் உள்ள பள்ளிக்கூடங்கள் மற்றும் ஆரம்பசுகாதார நிலையங்களுக்கு பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு வரப்படுகிறது. எனவே, இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

19. <u>திரு.V. ஐயப்பன், S/o.வேல்மணி, தான்தோன்றிமலை:</u>

எனது பெயர் ஐயப்பன். நான் தான்தோன்றிமலையில் இருந்து வருகிறேன். இந்தக் குவாரியினால் அரசுக்கு வருமானம் கிடைக்கிறது. கட்டுமான பொருட்களுக்கு எளிதாக கிடைக்கிறது. குவாரி இயங்காவிட்டால் கட்டுமான பொருட்களின் விலைகள் ஏறிவிடும். மேலும், சுற்றியுள்ள பகுதிகளுக்கு பல நன்மைகள் செய்து வருகிறார்கள். மரக்கன்றுகள் நட்டு வளர்த்து சிறப்பாக செய்து வருகிறார்கள். எனவே, இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

20. <u>திரு.V. ராஜேஷ், S/o.T.K. விஜயன், கரூர்:</u>

இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

21. <u>திரு.R. கருப்பண்ணன், S/o.ராமசாமி, புன்னம்:</u>

எனது பெயர் R. கருப்பண்ணன். நான் புன்னம் வேலாயுதம்பாளையத்தில் இருந்து வருகிறேன். நாங்களே பல கிரஷர்களுக்கு இடங்கள் கொடுத்துள்ளோம். நாங்கள் ஆடு, மாடுகள் மேய்க்கின்றோம். எந்த பாதிப்பும் இல்லை. எனவே, தராளமாக கிரஷருக்கு அனுமதி கொடுக்கலாம் என்று கூறினார்.

22. <u>திரு.S. பாலகிருஷ்ணன், S/o.சுப்பிரமணி, பஞ்சையம்பட்டி:</u>

என் பெயர் S. பாலகிருஷ்ணன், நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் க.பரமத்தி ஒன்றிய செயலாளர். இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் கல்குவாரி உரிமையாளர்களுக்கு என் இனிய காலை வணக்கம். மாற்றம் ஒன்றே மாறாதது என்ற பாசீக கோட்பாட்டில் தான் இந்த உலகம் இயங்குகிறது. தமிழகத்தில் 8 கோடி மக்கள் வசிக்கிறார்கள். அனைவருக்கும் வீடு என்பது இன்றியமையாததாகிவிட்டது. அனைத்து மக்களின் கனவாகவும் உள்ளது. கல் குவாரி தொழிலியின்றி நாட்டின் வளர்ச்சிக்கும் தனி மனிதன் வளர்ச்சிக்கும் எங்கும் செயல்படுவதில்லை. உலகம் தாராளமாயமான போதிலும் பல்வேறு தொழில் பாதிக்கப்பட்ட போதிலும் நாடு வேகமாக வளர்ச்சி அடைகிறது. அந்த வகையில் முக்கிய பங்காக கல் குவாரியும் உள்ளது. இந்தக் கருத்துக்கேட்புக் கூட்டத்தின் இந்த நிறுவனமானது 30 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்தது. இதுவரைக்கும் பொதுமக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை. எனவே இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

23. <u>திருமதி.M. ரேவதி, W/o.மோகன், புன்னம்:</u>

எனது பெயர் ரேவதி. நான் புன்னம் கிராமத்தில் இருந்து வருகிறேன். இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

24. <u>திரு.S. மோகன், S/o.சேகர், புன்னம்:</u>

எனது பெயர் மோகன். இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

25. <u>திரு.M. சக்திவேல், S/o.மாணிக்க சுந்தரம், பசுபதிபாளையம்:</u>

எனது பெயர் சக்திவேல். புன்னம் பசுபதிபாளையத்தில் இருந்து வருகிறேன். இந்த குவாரி சட்ட திட்டங்களுக்குட்பட்டு இயங்குவதாக கேள்விப்பட்டேன். இங்கு கிடைக்கும் மணல் வேறு எந்த மாவட்டத்திலும் தரமானதாக கிடைப்பதில்லை. எனவே, இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

26. <u>திரு.S. சுதாகரன், S/o.சண்முகம், பசுபதிபாளையம்:</u>

எனது பெயர் சுதாகரன். புன்னம் கிராமம் பசுபதிபாளையத்தில் இருந்து வருகிறேன். இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

15

27. திரு.R. தர்மலிங்கம், S/o.ராமசாமி, புன்னம்:

நான் புன்னம் கிராமத்தில் இருந்து வருகிறேன். இந்த கல்குவாரி இயங்குவதால் யாருக்கும் எந்த இடையூறும் கிடையாது. எனவே, இந்தக் கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கரூர் மாவட்டம்.

மாவட்ட வருவாய் அலுவலர்
கரூர் மாவட்டம்.